சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. Mcop. 298/2013

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் நாள் வெள்ளிக்கிழமை

மனுதாரர் தரப்பு சாட்சியாகிய ம.சா.2-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி. சித்ரா, தலைமை எழுத்தர் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மதியழகன் | தொழில் | |
| கணவர் பெயர் | நாராயணசாமி | ஜாதி | |
| கிராமம் | சின்னபுஷ்பகிரி | சமயம் | |
| தாலுக்கா | போளூர் | வயது | |

**16.12.2022 முதல் விசாரணை**

நான் இம்மனுவின் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மையானது தான். ஆவணங்கள் எதுவும் தாக்கல் இல்லை.

**குறுக்கு விசாரணை**

1. 05.08.2013 அன்று விபத்து நடந்தது. அய்யம்பாளையம் ஏரிக்கரையில் விபத்து நடந்தது. என் சொந்த வண்டி தான். விபத்தில் சம்மந்தப்பட்ட என்னுடைய வாகனத்தின் பதிவு எண் தெரியாது. ஆனால் வாகனத்திற்கு பதிவு எண் உள்ளது. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் என்னுடைய வாகனத்திற்கு பதிவு எண் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அது புதிய வாகனம் என்பதால் பதிவு எண் இல்லை. அதன்பிறகு வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தபோது வாகனத்தின் பதிவு எண்ணை நான் போலிசாரிடம் சொன்னேனா என்றால் இல்லை. என்னுடைய வாகனத்தை போலிசாரிடம் நான் ஒப்படைத்தேன்.

2. எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. என்னுடைய வாகனத்திற்கு காப்பீடும் இல்லை. ஓட்டுனர் உரிமம் இல்லாமல் போக்குவரத்து விதிகளை மீறி வாகனத்தை ஓட்டுவது தவறு என்றால் சரிதான்.

3. விபத்தில் சம்மந்தப்பட்ட என்னுடைய வாகனத்தை நான் ஓட்டி செல்லும்போது திருப்பும்போது பின்னால் வந்த ஜல்லி ஏற்றி வந்த டிப்பர் லாரி என்னுடைய இருசக்கர வாகனத்தின் பின் பக்கம் மோதிவிபத்து ஏற்பட்டது. விபத்து ரோட்டின் இடது ஓரமாக செல்லும்போது ஏற்பட்டது விபத்து ஏற்பட்டவுடன் என்னுடைய வாகனம் மண்ணில் விழுந்து விட்டது. என்னுடைய புகாரில் விபத்து ஏற்பட்டு என் வாகனம் மண்ணில் விழுந்தது என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. என்னுடைய இரு சக்கர வாகனத்தில் பின்புறத்தில் சங்கர் என்பவர் அமர்ந்து வந்தார் சங்கர் எனக்கு பழக்கமானவர்தான். விபத்தின்போது என் இரு சக்கர வாகனத்தை வாங்கி இரண்டு மாதங்கள் தான் ஆனது. நான் முதன்முதலில் வாங்கிய வாகனம் தான் அந்த இருசக்கர வாகனம் என்றால் சரிதான். நான் இரு சக்கரவாகனம் வாங்குவதற்கு

முன்பு ஓட்டுனர் உரிமம் வாங்கவில்லை என்றால் சரிதான். தற்காலிக ஓட்டுனர் உரிமமாவது நான் வாங்கி இருந்தேனா என்றால் இல்லை.

5. நான் தான் ஓட்டுனர் உரிமம் இல்லாமல் ஓட்டத் தெரியாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டி லாரியின் குறுக்கே சென்று விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணை செய்தார்கள்.

6. சங்கர் விபத்துநடந்து 6 மாதம் கழித்து தான் இறந்தார். விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் அதன் காரணமாகதான் சங்கர் இறந்தார் நானும் சங்கரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். விபத்து நடந்தபோது வேறு யாரும் அங்கு இல்லை. சங்கருக்கு மனைவி மற்றும் 2 பெண் பிள்ளைகள் உள்ளது.

7. விபத்து ஏற்பட்டவுடன் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து சங்கரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். விபத்து 05.08.2013 அன்று நடந்தது. 2 நாட்கள் கழித்து 07.08.2013 அன்று தான் புகார் கொடுத்தேன். விபத்து என்னால் தான் நடந்தது என்பதால் அதிலிருந்து தப்பிப்பதற்காகதான் 2 நாட்கள் கழித்து நான் காவல் நிலையத்தில் விபத்து குறித்து புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

8. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சங்கர் விபத்து நடந்து 6 மாதங்கள் கழித்து தான் இறந்தார் என்றும் அல்லது குறிப்பிட்ட தேதியில் தான் இறந்தார் என்றும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சங்கர் மனைவி அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்தேன்.

9. விபத்தானது என்னுடைய இருசக்கர வாகனத்தினால் தான் ஏற்பட்டதுள ன்றும் என்னுடைய இருசக்கர வாகனம் பதிவெண்ணை குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரரான காப்பீடு நிறுவனம் இழப்பீடு தொகை வழங்க வேண்டிய பொறுப்பல்ல என்றால் சரியல்ல.

10. விபத்தானது லாரி ஓட்டுனரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் இழப்பீடு தொகையை நான் தான் கொடுக்க வேண்டுமென்றும் காப்பீடு நிறுவனம் அதற்கு பொறுப்பேற்க முடியாது என்றால் சரியல்ல.